செ.வெ.எண்: 43 நாள்.15.08.2017.

**திருநெல்வேலி மாவட்டம்**

**பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, 146 பயனாளிகளுக்கு ரூ.1.27 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் இன்று (15.08.2017) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து சுதந்திரப் போராட்ட தியாகிகள் திரு.கி.லட்சுமிகாந்தன்பாரதி,இ.ஆ.ப., (ஓய்வு), திரு.கே.செல்லத்துரை, மற்றும் சிறப்பு தியாகி ஓய்வுதியம் பெறும் திருமதி.எஸ்.தாயம்மாள், மொழிக்காவலர் ஓய்வூதியம் பெறும் திரு.ரா.முத்துசாமி, திரு.சி.செல்லையா,சுதந்திர போராட்ட தியாகி குடும்ப உறுப்பினர் ஓய்வூதியம் திருமதி.எஸ்தர் நட்சத்திரம்,திருமதி.வள்ளியம்மாள்,திருமதி.செல்லம்மாள்,திருமதி.மேரி,திருமதி.தங்கம்மாள், திரு.ராமலிங்கம், ஆகியோர்களுக்கு பொன்னாடை அணிவித்து, கௌரவித்தார். மேலும், 146 பயனாளிகளுக்கு ரூ.1.27 கோடி மதிப்பில் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 143 நபர்களுக்கு சிறப்பான முறையில் பணிபுரிந்தமைக்கான பாராட்டு நற்சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து,பாளையங்கோட்டை சாராள்தக்கர் மேல்நிலைப்பள்ளி, தச்சநல்லூர் வேதிக் வித்யாஷ்ரம் சி.பி.எஸ்.பள்ளி தென்காசி புனித மிக்கேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குறிச்சி கீழவீரராகவபுரம் கணேச மூர்த்தி நடுநிலைப்பள்ளி, வடக்கன்குளம் பாலகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிவகிரி நாடார் கமிட்டி மேல்நிலை பள்ளி, பாளையங்கோட்டை லயோலா கான்வென்ட,குழந்தை தொழிலாளர் சிறப்பு பயிற்சி முகாம். ஆகிய பள்ளிகளின் மாணவ, மாணவிகள் என் இனிய தேசம், தேசதலைவர்கள், யோகா,தமிழர் பன்பாடு கலாச்சார நாகரிகம்,ஒயிலாட்டம்,தேசபற்று, விவசாயத்தின் அடிபடையில் இந்தியா வல்லரசு, பாடல்கள் ஆகியவைகளை விளக்கும் வகையில் 1000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சியில், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.24,869/– மதிப்பிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.43,800/– மதிப்பிலும், மாவட்ட மேலாளர் தாட்கோ மூலம் 4 பயனாளிகளுக்கு ரூ.21,11,638/– மதிப்பிலும், மாவட்ட தொழில் மையம் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.5,12,850/– மதிப்பிலும், மகளிர் திட்டத்தின் மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ.30,60,000/– மதிப்பிலும், இலவச வீட்டுமனை பட்டாக்கள்,திருநெல்வேலி வட்டாச்சியர் மூலம் 14 திருநங்கைகளுக்கு ரூ.80,056/– மதிப்பிலும், பாளையங்கோட்டை வட்டாச்சியர் மூலம் 30 பயனாளிகளுக்கு ரூ.10,68,000/– மதிப்பிலும், அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் மூலம் 45 பயனாளிகளுக்கு ரூ.19,80,000/– மதிப்பிலும், நாங்குநேரி வட்டாச்சியர் மூலம் 20 பயனாளிகளுக்கு ரூ.17,66,440/– மதிப்பிலும், சமூக பாதுகாப்புதிட்டம் நலிந்தோர் உதவி தொகை 5 பயனாளிகளுக்கு ரூ.1,00,000/– மதிப்பிலும், மாதாந்திர உதவித்தொகை 2 பயனாளிகளுக்கு ரூ.2,000/– மதிப்பிலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் இலவச வீட்டுமனை பட்டா 8 பயனாளிகளுக்கு ரூ.19,20,000, மதிப்பிலும், தேய்ப்பு பெட்டி மற்றும் தையல் இயந்திரம் 4 பயனாளிகளுக்கு ரூ.15,600/–மதிப்பிலும்,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் 1 பயனாளிகளுக்கு ரூ.3,800/– மதிப்பிலும், வேளாண்மைத் துறையின் மூலம் இரண்டு பயனாளிகளுக்கு ரூ. 10,795/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மேலும், சிறப்பாக பொதுசேவை புரிந்தை மற்றும் சிறப்பான முறையில் பணிபுரிந்தமைக்கான பாராட்டு மற்றும் நற்சான்றிதழ்களை 143 நபர்களுக்கும், தேசிய அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 17 விளையாட்டு வீரர்களுக்கு பதக்கங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜிலா சத்தியானந்த் சரக காவல்துறை துணைத்தலைவர் மற்றும் மாநகரகாவல் ஆணையர் திரு.கபில்குமார்சராட்கர்,இ.கா.ப, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அருண்சக்திகுமார் .இ.கா.ப, மாநகர காவல்துணை ஆணையர்கள் திரு.சுகணாசிங்.இ.கா.ப., திரு.பெரோஷ்கான்.இ.கா.ப. , மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்.இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்.இ.ஆ.ப., கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஜெகவீரபாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், உள்பட அனைத்து துறை அலுவலர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.